52

# உவமைகளின் வரிசை

## (21:28–22:14)

யோவானின் ஞானஸ்நானம் குறித்து யூதமதத் தலைவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு தெளிவாக பதில் கிடைக்கப் பெறாமையால், இயேசு மூன்று உவமைகளை வரிசைப்படுத்தி அவர்களுக்கு மறுஉத்தரவு அருளுகிறார்.

## இரண்டு குமாரர்களைக் குறித்த உவமை *(21:28-32)*

***28**ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து, மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய் என்றான்.*

***29**அதற்கு அவன், மாட்டேன் என்றான்; ஆகிலும் அவன் பின்பு மனஸ்தாபப்பட்டுப் போனான்.*

***30**இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான், அதற்கு அவன், போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை.*

***31**இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன்? என்று கேட்டார்; அதற்கு அவர்கள் மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

***32**ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்.*

இந்த முதலாவது கதை, அதிகாரத்தைக் குறித்த கேள்வியினிமித்தம், உண்மையாக யார் தேவனுடைய பிள்ளை என்பதை தெளிவாக பதிலாக கொடுக்கிறது. இந்த மனிதர்கள் தாங்கள் மட்டுமே தேவனுடைய பிரதிநிதிகள் என்றும், அவருடைய அதிகாரத்தினால் அவர்கள் பேசுவதாகவும் நம்பிக் கொண்டிருந்தனர். இயேசு தேவனுடைய அதிகாரத்தினால் பேசவில்லை என்றும், ஆகையால், அவர் தேவனுடைய குமாரனும் மேசியாவாகவும் இருக்க முடியாது என்பதை அவர்களுடைய கேள்வி மறைமுகமாக காட்டியது.

**வசனங்கள் *28-30.*** இயேசு இந்த உவமையை, ***ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?*** என்ற கேள்வியோடு துவங்கினார். பொதுவாக தம்முடைய வார்த்தைகளை கேட்போரின் கவனத்தைத் திருப்பவும்,

*அவருடைய சிந்தனையைத் தூண்டவும் அவர் இப்படி கேட்பது வழக்கம் (17:25; 18:12; 22:42). இந்த கதை* ***இரண்டு குமாரர்களையுடைய ஒரு மனுஷனைப் பற்றியது.*** *அவன் இருவரையும் ஒரே மாதிரியாக அணுகி நயமுடன் பேசி, தனது திராட்சத் தோட்டத்தில் போய் வேலை செய்யும்படி வேண்டினான். திராட்சத் தோட்டம் என்பதை ஒரு பொதுவான உருவகமாக திருமறை பேசுகிறது. சில நேரங்களில் ஜனக் கூட்டத்தையோ அல்லது தேவனுடைய ராஜ்யத்தையோ குறிப்பிடுவதாயிருந்தது (காண்க 20:1ன் விளக்கவுரை).*

*அந்தக் கலாச்சாரத்தில், குமாரர்கள் தங்களுடைய தகப்பனை கனம் செலுத்தவும் கீழ்ப்படியவும் எதிர்பார்க்கப்பட்டனர், விசேஷமாக அவர்கள் இன்னும் அவருடன் வாழ்ந்து கொண்டிருக்கையில் அப்படிச் செய்ய வேண்டும்.*[1] *இந்த கதையில் குறிப்பிடப்படும் தகப்பன் தேவனை பிரதிநிதித்துவப் படுத்துகிறது, குமாரர் இரண்டு வகையான யூதர்களை குறிப்பிடுகிறது. தகப்பனுடைய வேண்டுகோளை கேட்ட மாத்திரத்தில், மாறுத்தரமாக முதலாம் மகன்* ***நான் போகமாட்டேன்*** *என்றான்; ஆகிலும் பின்பு அவன் மனஸ்தாபப்பட்டு திராட்சத் தோட்டதில் வேலை செய்யப்* ***போனான்.***[2] *அவன் தேவனுக்கு எதிர்த்து நின்று பின்பு மனந்திரும்பின யூதர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறான். தகப்பன் தனது இரண்டாவது குமாரனிடத்திலும் அதே காரியத்தை வேண்டிக் கேட்ட போது, அவன் உடனே,* ***நான் போகிறேன், ஐயா*** *என்று சொன்னான்;* ***ஆகிலும் அவன்*** [பிறகு] ***போகவில்லை.*** *இவன் தேவனுக்குக் கீழ்ப்படிவதாகச் சொல்லியும் உண்மையில் அப்படிச் செய்யாமல் போன யூதர்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறான் (காண்க 23:3).*

***வசனம் 31.*** *இப்படி உவமையை தொடர்புபடுத்திப் பேசின பின்பு, இந்த கல்விமான்களாய் கருதிக்கொண்ட நபர்களைப் பார்த்து இயேசு ஒரு கேள்வியைக் கேட்டார்:* ***அவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தை செய்தவன்?*** *தங்களுடைய சொந்த குற்றங்களைச் சற்றும் சிந்தியாமல், விரைவாகவும் சரியாகவும் பதிலளித்தார்கள்:* ***மூத்தவன்தான்.***

*பின்பு கர்த்தர் தமது கருத்தை வெளிப்படுத்தினார்:* ***ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்.*** *மனதைக் குத்தச் செய்யும் இந்த வார்த்தைகளால் பிரதான ஆசாரியர்களும் மூப்பர்களும் கோபமடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை (21:45, 46). "ஆயக்காரரும் வேசிகளும்" அக்கிரமஞ் செய்யும் ஜனங்களுக்கு ஒப்பிடப்படுகிற பழமொழிகளானவர்கள் (5:46 க்கான விளக்கவுரையைக் காண்க). அப்படிப்பட்ட பாவிகள் யூதமதத்தலைவர்களுக்கு முன் இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள், இறுமாப்பு கொண்டிருந்த அவர்கள் இருதயம் மனமாறாமல் அவர்களை தடுத்து நிறுத்துகிறது. அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்து அதில் பிடிவாதமாயிருக்கிற தன்மை இராஜ்யத்தின் கதவுகளை அவர்களுக்கு விரோதமாக அடைக்கச் செய்யும்.*

***வசனம் 32.*** *அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு மற்றும் நிக்கோதேமு போன்ற சில யூதமதத் தலைவர்கள், தங்களைத் தாழ்த்தி இயேசுவின் சீஷர்களானார்கள் (27:57; மாற்கு 15:43; யோவான் 19:38, 39); ஆகிலும் பெரும்பாலானோர் அப்படி வரவில்லை. அதற்கு மாறாக இந்த மேட்டிமையான மதத்தலைவர்கள், தங்களைத் தாழ்த்தி, இராஜ்யத்தின்*

சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் **ஆயக்காரர்களும் வேசிகளும்** ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறார்கள் என்று இயேசு சொன்னார்.[3] மதத்தலைவர்கள் **யோவானின்** செய்தியைப் (கிறிஸ்துவின் செய்தியையும் கூட) புறந்தள்ளிக் கொண்டிருக்கையில், இந்தப் பாவிகள் இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஆயத்தமுடன் ஏற்றுக் கொண்டனர். மனந்திரும்புதலுக்கென்றும் பாவமன்னிப்பிற்கென்றும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்கான அழைப்பைத் திரளான ஜனங்கள் ஏற்றுக் கொண்டதை சாட்சியிட்டிருந்தும் அவர்கள் இருதயக் கடினத்தை அது மிருதுவாக்கவில்லை.

## வீட்டெஜமானும் திராட்சத் தோட்டமும் பற்றிய உவமை (21:33-46)

***33வேறொரு உவமையைக் கேளுங்கள், வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான். அவன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்.***

***34கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்.***

***35தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலை செய்து, ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.***

***36பின்னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களையும் அப்படியே செய்தார்கள்***

***37கடைசியிலே அவன்: என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.***

***38தோட்டக்காரர் குமாரனைக் கண்ட போது, இவன் சுதந்திரவாளி; இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு;***

***39அவனைப் பிடித்துத் திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.***

***40அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான்? என்று கேட்டார்.***

***41அதற்கு அவர்கள்: அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்றகாலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத் தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாக கொடுப்பான் என்றார்கள்.***

***42இயேசு அவர்களை நோக்கி: வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?***

***43ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.***

***44இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது***

***எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், என்றார்.***

[45]***பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து,***

[46]***அவரைப் பிடிக்க வகை தேடினார்கள். ஆகிலும் ஜனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினால் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்.***

***வசனம் 33.*** *இயேசு தொடர்ந்து,* ***வேறொரு உவமையைக் கேளுங்கள்*** *என்றார். இயேசு 'இந்த நிகழ்ச்சியின் போது சொன்ன மூன்று கதைகளில் இது இரண்டாவது கதை (21:28-22:14). இதற்கு முந்தைய உவமையில், "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்ற கேள்வியோடு கூட்டத்தின் கவனத்தைத் திருப்பினார் (21:28), இந்தக் காட்சியில், "கேளுங்கள்" எனும் உத்திரவு வார்த்தையோடு துவங்குகிறார். இன்னமும் அவர் பிரதான ஆசாரியர்களோடும் மூப்பர்களோடும் தான் உரையாற்றிக் கொண்டிருந்தார் (21:23, 28), மீண்டும் ஒருமுறை உவமை அவர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டிருந்தது (21:45, 46).*

*ஏற்கனவே ஏசாயாவினால் சொல்லப்பட்ட உவமையை மனதில் கொண்டே, இயேசு இந்த உவமையை குறிப்பிட்டிருக்கக் கூடும் (ஏசாயா 5:1-7). தேவனுக்கு இஸ்ரவேலோடும் யூதாவோடும் இருந்த உறவுமுறையை வீட்டெஜமானுக்கும் அவனுடைய திராட்சத் தோட்டத்துக்கும் ஒப்பிட்டு தீர்க்கதரிசி பேசுகிறார்:*

> *அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி,*
> *அதிலே நற்குல திராட்சச் செடிகளை நட்டு,*
> *அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் கட்டி,*
> *அதில் ஆலையையும் உண்டுபண்ணி,*
> *அது நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று காத்திருந்தார்;*
> *அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது (ஏசாயா 5:2).*

*இந்த உவமைகளில் ஒரு பெரிய வித்தியாசம் காணப்படுகிறது: மத்தேயு 21ல், பிரச்சனை குத்தகைகாரர்களான தோட்டக்காரர்கள்தான் (அதாவது யூத மதத் தலைவர்கள்), அதே வேளையில், ஏசாயா 5ல், திராட்சச் செடிகள் (இஸ்ரவேல் மற்றும் யூதா ஜனங்கள்). இருப்பினும், இரண்டு உவமைகளுமே ஒரே அடிப்படையைக் கொண்டுள்ளது - தோட்டத்தின் சொந்தக்காரருக்கு கனி கிட்டுவதில்லை.*

*இயேசு தமது உவமையை* ***வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி*** *என்று சொல்லி ஆரம்பிக்கிறார். மற்ற உவமைகளைப் போலவே, வீட்டெஜமான் என்பது தேவனைக் குறிக்கிறது (காண்க 20:1ன் விளக்கவுரை), மற்றும் திராட்சத் தோட்டம் ஜனங்களை அல்லது தேவனுடைய ராஜ்யத்தை குறிப்பிடுகிறது (21:43). திராட்சத்தோட்டம் பாதுகாப்பாகவும் கனி கொடுக்கத் தக்கதாகவும் இருக்க தேவையான எல்லாவற்றையும் வீட்டெஜமான் செய்து விட்டார். ஆயத்த வேலைகளில் பட்டியலிடுவதிலிருந்தே அவர் எவ்வளவாய் அந்தத் தோட்டத்தின் மேல் அக்கரையுள்ளவராயிருந்தார் என்பதையும் அந்தத் தோட்டத்துக்குத் தாமே முற்றிலும் உரிமைபெற்றவர் என்பதையும்*

அடிக்கோட்டுக் காட்டுகிறது.

முதலாவதாக, அந்த வீட்டெஜமான் **தோட்டத்தைச் சுற்றிலும் வேலியடைத்தார்.** "வேலி" எனும் (*phragmos*) பதம் "ஒரு சுவரை," "வேலியடைப்பை," அல்லது "புதர் வேலியாக" இருந்திருக்கலாம். கற்களால் சுவரை எழுப்புவது வழக்கமாக இருந்துள்ளது (எண்ணாகமம் 22:24; நீதிமொழிகள் 24:30, 31), அல்லது முள்வேலியை நடுவது (காண்க நீதிமொழிகள் 15:19; ஓசியா 2:6) இதினால் திராட்சத்தோட்டம் துஷ்டமிருகங்களிடமிருந்தும் திருடர்களிடமிருந்தும் பாதுகாக்கப்படும் (சங்கீதம் 80:12, 13).

அடுத்ததாக, அந்த மனுஷன் **ஒரு ஆலையை நாட்டினான்,** இதனால் அறுவடையை எதிர்பார்த்தான். "திராட்ச பழங்களை பிழிந்தெடுக்க" (*lēnos*) பழங்களை பாதங்களின் கீழே கோட்டு மிதித்து அதன் சாறை பிழிந்தெடுப்பார்கள். ஒரேமாதிரியான, இரண்டு (அகன்ற பெரிய) கல் தொட்டிகளை மேலே ஒன்றும் கீழே ஒன்றுமாக - ஒரு கடினமான பாறையில் ஒன்று அல்லது இரண்டடி ஆழத்தில் பதித்து வைத்து விடுவார்கள். கடினமான பாறை கிடைக்காவிட்டால், மண்ணைத்தோண்டி, கற்களைச் சுற்றிலும் அடுக்கி சிமெண்டால் பூசிவிடுவார்கள், அந்த அகன்ற தொட்டிகள் நடுவில் இருக்கும். அறுவடைக் காலத்தில், திராட்சப் பழங்களை மிதிப்பது வாலிபர்களாக இருக்கும். மேல் பகுதிக் கிண்ணத்தில் திராட்சப் பழங்களை மிதித்த பின், ஒரு வெளியேற்றும் துவாரத்தின் வழியே கீழ்பகுதி கிண்ணத்துக்குள் திராட்ச ரசம் வழிந்தோடும். பிறகு, திராட்சப் பழரசம் துருத்திக்குள் ஊற்றிப் பதப்படுத்தப்படும். திராட்சப் பழங்களை மிதிக்கும் தருணத்தில் பெரிய சந்தோஷமும் கொண்டாட்டமும் அங்கே காணப்படும் (ஏசாயா 16:10).

கடைசியாக, வீட்டெஜமான் ஒரு **கோபுரத்தைக் கட்டி** அதின்மேல் காவல் காரன் நிறுத்தப்பட்டு தோட்டத்தைப் பட்சித்துப் போடும் சக்திகளையும் திருடர்களையும் சுற்றுவட்டாரத்திலிருந்து வராதபடி பாதுகாக்கப்படும் (2 நாளாகமம் 26:10; உன்னதப்பாட்டு 2:15). திராட்சத் தோட்டத்தில் கட்டப்படும் ஒரு கோபுரம் (*purgos*) சுமார் பத்தடி உயரத்தில் வட்டமாக கட்டப்படும். நிலப்பரப்பு கற்களால் கட்டப்பட்டு அது தங்கிக் கொள்ளும் இடமாக பயன்படுத்தப்படும். மேல் பகுதி கிளைகள் கொண்டவையாக கட்டப்பட்டிருக்கும்.[4] அதில் நின்று காவல் காப்பவன் முழுத் தோட்டத்தையும் கண்காணிப்பான். அறுவடைகாலம் முழுவதும் திராட்சத் தோட்டத்தைப் பாதுகாக்கும்படி காவல்காரன் நியமிக்கப்படுவான்.

வீட்டெஜமான் இந்த ஆயத்தங்களை தனது தோட்டத்தில் செய்தபின், **திராட்சத் தோட்டத்தைப் பராமரித்து வளர்க்கும் நபர்களிடம் (தோட்டக்காரர்கள் வசம்) குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விட்டு வெளியூர்** பயணங்களில் போய் **விட்டான்.** அவர்கள் பயிர் செய்யவும், தேவையற்ற கிளைகளை நிறுத்தி, திராட்ச செடிகளை பராமரித்து அதினால் நிறைவான அறுவடை செய்ய ஏதுவான விளைச்சலுக்கு வழி வகுப்பது அவர்களுடைய பொறுப்பாயிருந்தது. பெரிய தோட்டங்களின் அமைப்புகள் பலஸ்தீனாவில் இக்காலக்கட்டங்களில் சகஜமாக (பொதுவாக) இப்படி இருந்தது. இந்தத் தோட்டங்கள் ஐசுவரியமுள்ள யூதர்களாலோ அல்லது அந்நியர்களாலோ சொந்தமாக்கப்பட்டு ஏழை யூதர்களின் பராமரிப்பில் விடப்படும்.[5] இந்த உவமையில் குறிப்பிடப்படும் தோட்டக்காரர்கள் யூதமதத்

*தலைவர்கள் (21:45).*

**வசனம் 34. அறுவடை காலம் என்பது** நேரடியாகச் சொன்னால் உண்மையில் "பழமுதிர்வு காலம்" (KJV). அந்த பருவக்காலம் வந்த போது, வீட்டெஜமான் **தனது ஊழியக்காரர்களை** அனுப்பி தோட்டக்காரனிடமிருந்து **தனது பங்கைப் பெற்றுவரும்படி செய்தான்** ("பழங்களை"; KJV). இது அறுவடையை பங்கிட்டுக் கொள்ளுதல் எனும் "குத்தகை" முறை.

தோட்டக்காரர்கள் தங்கள் அறுவடைகளை பகிர்ந்து கொடுத்தல் முறை உன்னதப்பாட்டில் சொல்லப்பட்டு உள்ளது:

> "பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத்தோட்டம் உண்டாயிருந்தது, அந்தத் தோட்டத்தைக் காவலாளிகள் வசத்திலே அதின் பலனுக்காக, ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டுவரும்படி விட்டார்" (உன்னதப்பாட்டு 8:11).

இந்தக் காரியத்தில், கனிகள் விற்கப்பட்டு பணத்தை ராஜாவினிடத்தில் கொண்டு போகும்படி கோரப்பட்டது. தோட்டக்காரர்கள் தங்களுக்கு இருநூறு வெள்ளிக் காசை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர் (உன்னதப்பாட்டு 8:12). திராட்சத் தோட்டம் வீட்டெஜமானுடையது ஆதலால் இலாபத்தின் பெரும்பகுதி அவனுக்கே போய்ச் சேர்ந்தது.

இந்த உவமையில், வீட்டெஜமான் கனிகளை வசூலித்துக் கொள்வதற்கு அவன் உரிமை கொண்டிருந்தான். குறிப்பிட்ட காலவரைக்குள் விளைச்சலைப் பெறா விட்டால், தோட்டத்து உரிமம் அவனை விட்டுப் போய்விடும் ஆபத்தில் இருந்தான்; தோட்டக்காரர்கள் சட்டப்படி உரிமை கோர வாய்ப்பிருந்தது. மிஷ்னாவில் சொல்லப்பட்டுள்ளபடி, திராட்சத்தோட்டத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட ஒருவன், மூன்று வருடங்களுக்கோ அல்லது மூன்று அறுவடை காலத்துக்கோ எவ்வித வில்லங்கமும் இல்லாதபடி தக்க வைத்துக் கொண்டால், அது அவனுடையது என்று உரிமை கொண்டாட முடியும்.[6] இந்தத் திட்டம் *ஹஸாகா* என்று குறிப்பிடப்பட்டது. எப்படியிருப்பினும், தோட்டக்காரர்களிமிருந்து தனக்குரிய கனிகளை வசூல் செய்வதன் மூலம், ஒரு வீட்டெஜமான் தனது ஆஸ்தியைக் குறித்த எந்த சந்தேகத்தையும் தெளிவாக்குவான். தால்மூத் சொல்லுகிறபடி, "ஒரு நிலத்தைச் [சொந்தங்கொண்டாடுபவன்] உதவும் [நிலத்தின் சொந்தக் காரனுக்கு] கனிகள் கொண்ட ஒரு கூடையை அவன் தோள்மேல் தூக்கி வைத்தாலும், உடனடியாக நிலம் [பின்னதாகக் குறிப்பிடப்பட்டவனுக்கே] சொந்தமாகும் என்கிற யூகம் வந்து விடும்."[7] லியோன் மோரீஸ் குறிப்பிடுகையில்,

> ஒரு புதிய திராட்சத் தோட்டத்தில் நான்காவது வருடம்வரை கனி கொடுக்காது, ஐந்தாம் வருடம் வரை அதிகமான இலாபம் கிடைக்காது ... . தோட்டத்து சொந்தக்காரன் வாடகையைப் பெறுவதன் மூலம் தன் ஆஸ்தியை நிலை நிறுத்துகிறான், அந்த வாடகை ஒரு சிறிய தொகையாயிருந்தாலும் பரவாயில்லை, அந்தத் திராட்சத் தோட்டம் நிலை பெறும் வரை அவன் வசூலிக்க வேண்டும்.[8]

**வசனம் 35.** தோட்டக்காரர்கள் இயன்றவரை அந்த திராட்சத்

*தோட்டத்தை எடுத்துக் கொள்ள முயற்சித்தனர். அவர்கள் வீட்டெஜமான் தனது பங்கு திராட்சப் பழங்களை வசூலித்துக் கொண்டு வரும்படி அனுப்பப்பட்ட* **ஊழியக்காரர்களை** *தவறாக நடத்தினர்:* **ஒருவனை அடித்து, இன்னொருவனை கொலை செய்து, மற்றொருவனை கல்லெறிந்தார்கள்.** *மிருகத்தனமாய் நடந்து கொண்ட இந்த தோட்டக்காரர்கள் மேல் நம்மைப் போலவே, இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களை கோபப்படுத்தியிருக்கும். களங்கமற்றவர்களாயும், நிராயுதபாணிகளுமாயிருந்த ஊழியக்காரர்கள் ஒழுக்க ரீதியில் ஒழுங்கீனமானவர்களாக பார்க்கப்பட்டனர்.*[9] *இங்கே குறிப்பிடப்படும் ஊழியக்காரர்கள் பழைய ஏற்பாட்டில் தேவனால் அனுப்பப்பட்டு, அவருடைய ஜனங்களை மனந்திரும்பும்படி அறைகூவல் விட்ட தீர்க்கதரிசிகளை சுட்டிக்காட்டுகிறது (காண்க ஏசாயா 5:4). தீர்க்கதரிசிகளுக்கு இஸ்ரவேலர் செவிசாய்க்கவில்லை; அவர்கள் அவர்களை நிந்தித்து சிலரை கொலை செய்தார்கள்.*[10]

***வசனம் 36.*** *வழக்கத்துக்கு மாறான ஒரு கிருபையை காட்டும் பொருட்டு, வீட்டெஜமான் உடனடியாக படையை அனுப்பி தோட்டக்காரர்களை அப்புறப்படுத்தவில்லை. மாறாக, அவன்* **இன்னொரு கூட்ட ஊழியர்காரர்களை முன்பைக் காட்டிலும் அதிகமான பேரை** *நியாயமாய் தனக்கு கிடைக்க வேண்டியதைப் பெற்றுவரும்படி அனுப்பினான். துன்மார்க்கமான அந்த தோட்டக்காரர்கள் அந்த ஊழியக்காரர்களையும்* **அதே போல செய்தார்கள்.** *வீட்டெஜமானின் செயல், சந்ததிகள் தோறும் அடுத்தடுத்து ... தீர்க்கதரிசிகளை இஸ்ரவேலருக்கு அனுப்பிவைத்த "தேவனுடைய நீடிய பொறுமையையும் இரக்கத்தையும் காட்டுகிறது."*[11]

***வசனம் 37.*** *துன்மார்க்கமான மனுஷர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, தனது உரிமை கோரிக்கையை நிறைவு செய்யும்படி, வீட்டெஜமான் கடைசியாக ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்குக் கொடுத்தார். வீட்டெஜமான் தனது* **சொந்தக் குமாரனையே** *அனுப்பி, தோட்டக்காரர்கள் குமாரனுக்கு கெடுதி ஒன்றும் செய்யாமல் அவனை* **மதிப்பார்கள்** *என்று எண்ணினான். மாற்கு அவனை "பிரியமான ஒரே குமாரனை" என்று குறிப்பிடுகிறான் (மாற்கு 12:6). வசனம் 38ல், தோட்டக்காரர்கள் அவனை "சுதந்தரவாளி" என்றார்கள். இந்தக் குமாரன் இயேசுவை பிரதி நிதித்துவப்படுத்துகிறான், அவர் "தேவனுக்குப் பிரியமான குமாரன்" (3:17; 17:5). இந்த உவமையில் குறிப்பிடப்படுகிற அநேக திறவுகோல் கருத்துக்கள் எபிரேயர் நிருபத்தின் ஆரம்ப வசனங்களில் கொண்டு வரப்பட்டுள்ளது:*

> பூர்வ காலங்களில் அநேக நேரங்களில் *தீர்க்கதரிசிகள்* மூலமாய் அநேக வகைகளில் நமது முற்பிதாக்களுடன் பேசின *தேவன்* இந்தக் கடைசி நாட்களில் *தமது குமாரன்* மூலமாய் நம்மிடத்தில் பேசினார், இவரை சர்வத்துக்கும் *சுதந்தரவாளியாக* நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் (எபிரெயர் 1:1, 2; NIV; வலியுறுத்தல் கூட்டப்பட்டது).

***வசனம் 38.*** *தோட்டக்காரர்கள் வீட்டெஜமானின் குமாரனைக் கண்டபோது, அவனை திராட்சத் தோட்டத்தின் சுதந்தரவாளி என்று உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் ஒன்றாகக் கூடி துராலோசனை பண்ணி,* **இவனைக்**

**கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள்** என்றார்கள். சிலர் இதை ஆலோசனையாகக் குறிப்பிட்டு, "சுதந்தரவாளி" என்றால் அவனுடைய தகப்பன் மரித்துப் போனான் அல்லது நிலத்தின் பத்திரங்களை அவன் பெயருக்கு மாற்றிக் கொடுத்திருக்கக் கூடும் என்று நினைத்தார்கள். எப்படியிருப்பினும், அவர்கள் திராட்சத் தோட்டத்தை எடுத்துக் கொள்ள குமாரன்தான் தடையாக இருப்பதாக நினைத்து அவனை அழித்துவிட முடிவுசெய்தனர் (1 இராஜாக்கள் 21).

அதே போல, யூதமதத் தலைவர்கள் இயேசுதான் தங்களுடைய ஜனங்கள்மீது செலுத்தும் ஆதிக்கத்துக்குத் பயமுறுத்தலாக இருப்பதாக உணர்ந்தனர். யோவான் 11:47-53ல், இயேசு தொடர்ந்து அடையாளங்களை நடப்பித்தால், மேலும் மேலும் அநேகம் பேர் அவரில் விசுவாசம் வைப்பார்கள் என்று தங்களுக்குள் விவாதித்தார்கள். மேசியாவாக இயேசுவின் நன்மதிப்பு உயருமானால் அது ரோமர்களின் படையெடுப்புக்கு வழிவகுக்கும், அது அவர்களுடைய நாட்டின் வீழ்ச்சியைக் கொண்டு வரும். ஒரு நாடு வீழ்ச்சியடைவதைக் காட்டிலும் ஒரு மனுஷன் சாகிறது மிக நலம் என்று கண்டார்கள். ஜனங்கள் மீது தங்களுக்கு உள்ள அதிகாரத்தை இழந்து போக ஏதுவாக பிரச்சனைக்குள்ளாவதை அவர்கள் எதிர்கொள்ள இயலவில்லை, எனவே அவரைக் கொலை செய்யும்படி ஒன்றாகக் கூடி ஆலோசனை பண்ணினார்கள்.

***வசனம் 39.*** தோட்டக்காரர்கள் வீட்டெஜமானின் குமாரனைப் பிடித்து, **திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே தள்ளிக் கொலை செய்தார்கள்.** மாற்கு 12:8ல் இந்த வாக்கியம் மாற்று வரிசையில் பேசுகிறது; அவனைப் பிடித்து, கொலைசெய்து, திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டு விட்டார்கள். மத்தேயுதான் இயேசு சொன்ன உவமையை அப்படியே பிரதிபலிக்கிறார் என்று மிக அதிகமாக நம்பப்படுகிறது.[12] இந்த நிகழ்ச்சியின் தொடர்வரிசை குறித்து இரண்டு அறிவுப்பூர்வமான விளக்கமளிக்கப்படுகிறது. முதலாவதாக, குமாரனை கொல்லுவதற்கு முன்பாகவே திராட்சத்தோட்டத்திலிருந்து வெளியே தூக்கிப்போடுவது ஒருவேளை சுத்தத்தினிமித்தமாக இருந்திருக்கலாம். மோரீஸ் இதை ஆலோசனையாக குறிப்பிட்டு, திராட்சத் தோட்டத்தில் குமாரனுடைய இரத்தம் சிந்தப்படுமேயாகில், அந்தப் பகுதி முழுவதுமே (அசுத்தம்) தீட்டுப்பட்டதாகிவிடும். அதன் விளைவாக, விளைச்சலும் தீட்டுப்பட்டதாயிருக்கும், இதனால் விளைச்சலை விற்பனை செய்வது கடினம்.[13] இரண்டாவது கருத்து என்னவெனில், தொடர் வரிசை இயேசு எருசலேமுக்குப் புறம்பே கொண்டுபோகப்பட்டு சிலுவையில் அறையப்படுவதைப் பிரதிபலிக்கிறது (யோவான் 19:17, 20); அவர் "நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்" (எபிரெயர் 13:12).

தாம் சீக்கிரத்தில் மரிப்பார் என்று இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் வெளிப்படுத்தினார் (16:21; 17:22, 23; 20:18, 19). இந்த சமயத்தில், தம்முடைய சத்துருக்களுக்கும் அதே உண்மையைச் சொன்னார்; ஆகிலும், அவருக்கு வரவிருந்த மரணம் ஒரு உவமையில் மூடப்பட்டிருந்தது.

***வசனங்கள் 40, 41.*** உவமையின் முடிவில், இயேசு யூதமதத் தலைவர்களிடம் திராட்சத் தோட்டத்தின் **எஜமான்** வரும்போது, குமாரனைக் கொன்று போட்ட தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்.

மதத்தலைவர்கள் மறுமொழியாக, **அந்தக் கொடியவரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற வேளையில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்தை குத்தகையாகக் கொடுப்பான்** என்றார்கள். தோட்டக்காரர்களின் அநீதியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கடுங்கோபங் கொண்ட மதத்தலைவர்களே வசனத்தில் பேசும் அலப்புதல்களுக்கு சாட்சி: கொடியவரின் ... கொடுமையான முடிவு (*kakous kakōs*). தோட்டக்காரர்களாக இந்த கதையில் சொல்லப்படுவோர் வீட்டெஜமான் வந்து தங்கள் மீது பழிவாங்குவான் என்று எதிர்பாராததால் ஆச்சரியப்பட்டார்கள். ரோமமுறைப்படி, ஒரு ஊழியக்காரனால் ஒரு எஜமான் கொலை செய்யப்படும்போது, அவனுடைய ஊழியக்காரர்கள் எல்லாரும் தண்டனையாக கொல்லப்படுவார்கள்.[14] எனவே வீட்டெஜமானுடைய குமாரனைக் கொல்லத் தீர்மானிக்கும் போதே அவர்கள் இதைக் காட்டிலும் குறைவான தண்டனையை எதிர்பார்த்திருக்க முடியாது.

தங்களுடைய பதில் யாருக்குப் பொருந்துகிறது என்று புரிந்து கொள்ளாமலேயே, மீண்டும் ஒருமுறை யூதத் தலைவர்கள் சரியான பதிலைக் கொடுத்தார்கள் (21:31; காண்க 2 சாமுவேல் 12:5-7). இந்த உவமை எப்படி அவர்களுக்குத் தொடர்புடையது என்று சுட்டிக் காட்டுவதை அவர்கள் காணத் தவறினார்கள், தேவனுடைய ஜனங்கள் மீது அதிகாரஞ் செலுத்த அவர்கள் அபாத்திரர் என்பதை விளங்கப் பண்ணினார்கள். அவர்கள் தேவன் தமது ராஜ்யத்தின் மீது கொண்டுள்ள உரிமம் உடைய பதவி மற்றும் அதிகாரத்தை வன்முறையில் பிடுங்கிக் கொள்ள முயற்சித்தனர். அவர்கள் தங்களிடம் வந்த தீர்க்கதரிசிகளை கொன்று போட்டிருந்தார்கள், கடைசியாக அவருடைய குமாரனையும் கொல்வார்கள். இருந்த போதிலும், அவர்களுடைய கலகத்திற்கும் வன்முறைகளுக்கும் தக்க பலனை தேவன் திரும்ப செலுத்துவார். இந்த நியாயத்தீர்ப்பு கி.பி. 70ல் எருசலேமும் அங்கிருந்த தேவாலயமும் அழிக்கப்பட்ட போது சுமார் நாற்பது ஆண்டுகள் கழித்து நிறைவேறியது.

**வசனம் 42.** உவமையை அவர்களுக்கு தொடர்புபடுத்தத் துவங்கி, ... **நீங்கள் வேதத்தில் ஒரு போதும் வாசிக்க வில்லையா?** என்று கேட்டார். இப்படிப்பட்ட போதனை முறையை ரபீமார்களுடன் விவாதிக்கிற போதும் கலந்துரையாடும் போதும் அவர் அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார் (12:3, 5; 19:4; 21:16; 22:31). இந்தக் கேள்வி அவர்களுக்கு மன உளைச்சலைக் கொடுத்திருக்க வேண்டும், ஏனெனில் அவர் அவர்களுடைய பள்ளிகளில் பயின்றதில்லை.

இயேசு தொடர்ந்து சங்கீதம் 118:22, 23 லிருந்து மேற்கோள் காட்டிப் பேசுகிறார்:

> ***வீடு கட்டுகிறவர்களால் ஆகாதென்று,***
> ***தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று,***
> ***அது கர்த்தராலே ஆயிற்று,***
> ***அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.***

அவர் குறிப்பிடும் அர்த்தம் மிகத் தெளிவு: இயேசு தாமே "மூலைக் கல்லாகிய தலைக்கல்லாக" இருந்தார். ஆனால் யுதமதத் தலைவர்கள் அவரைத் தள்ளிவிட்டனர். அவர்கள் புறந்தள்ளினாலும், தேவனுடைய புதிய

*கட்டிடத்தில் "மூலைக்குத் தலைக்கல்லாக" இன்னமும் வருகிறவராயிருந்தார்.*

*பழைய ஏற்பாட்டு வார்த்தைகள் கிரேக்க மொழி வசனப்பகுதியிருந்து மத்தேயு மேற்கோள் காட்டியிருப்பது செப்துவஜிந்த் எனும் எபிரேய - கிரேக்கு பதத்தின் பொருளுடன் சொல்லுக்குச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசனப் பகுதி ஆதிசபையிலே மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தது என்பது தெளிவு. இவ்வசனங்கள் சுவிசேஷத்தில் மட்டுல்ல (21:42; மாற்கு 12:10, 11; லூக்கா 20:17), ஆனால் அது நடபடிகள் 4:11 லும் 1 பேதுரு 2:7 லும் கூடக் காணப்படுகிறது. இந்த அதிகாரத்தில் இது இரண்டாவது தடவை சங்கீதம் 118 லிருந்து பயன்படுத்தப்படுகிறது (21:9 ற்கான விளக்கவுரையைக் காண்க).*

***வசனம் 43.*** *யூதமதத் தலைவர்களின் துரோகங்களின் நிமித்தம், **தேவனுடைய ராஜ்யம்** அவர்களிடத்திலிருந்து நீக்கப்படும் என்று இயேசு அவர்களிடம் சொன்னார். **அதற்கேற்ற கனிகளைத் தரும் ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்.** வஞ்சப் புகழ்ச்சி அணியாக, அவர்களுடைய மதிப்பீட்டின்படியே அவருடைய தீர்ப்பு ஒத்துப் போனது (21:41) இந்த புதிய "ஜனங்கள்" கர்த்தருடைய கிருபையுள்ள அழைப்பை தாழ்மையுடன் ஏற்றுக் கொண்ட யூதரோ புறஜாதியோ ஆவர் (1 பேதுரு 2:9, 10).*

***வசனம் 44.*** *சில புராதன பிரதிகளில் இந்த வசனம் காணப்படாததால், லூக்கா 20:18 லிருந்து ஒரு வேதபாரகனால் சேர்க்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. எப்படியிருப்பினும் இரண்டு வசனங்களும் ஒன்றாகக் காணப்பட்டாலும், கிரேக்க மொழியில் இரண்டும் ஒன்றைப் போல் ஒத்துப் போவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, விடுபடுதலுக்குக் காரணம் ஒரு வேதபாரகன் வசனம் 43ன் கடைசியிலிருந்து (autēs) வசனம் 44ன் கடைசி வார்த்தைக்கு (auton) பார்வை மாறியிருக்கக் கூடும்.*[15]

*கல்லைப் பற்றிய உருவக மொழி வசனம் 42 லிருந்து தொடர்கிறது. பொதுவாக பேசுவோமானால், **இந்தக்கல்லின் மேல் விழுகிறவன்** என்பது கிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் வருகிற ஒருவனை அநேகமாகக் குறிப்பிடலாம். அவனுடைய மனந்திரும்புதல் அவன் **நொறுங்கிப் போனதாக** இருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும் கிறிஸ்து அவனை சொஸ்தப்படுத்தி சரிப்படுத்துவார். அதற்கு மாறாக கல் யார் மேல் **விழுகிறதோ** அவனை அது **நொறுக்கிப் போடும்.** இந்தக் தனி நபர் தண்டனையை அனுபவிப்பான். இந்தச் சொல் இயேசுவின் வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு குறிப்பாக பொருந்தத்தக்கதாக கூறப்பட்டது: கிறிஸ்துவை புறந்தள்ளிய யூதர்கள் கி.பி. 70ல் தீத்துராயன் எருசலேமை நசுக்கிய போது ரோம போர்ச்சேவகர்களால் தங்களுடைய வீழ்ச்சியைக் கண்டார்கள். இப்படியாக யூதர்களின் பொருளாதாரம் முடிவுக்கு வந்தது.*

***வசனங்கள் 45, 46.*** *யூத மதத் தலைவர்களால் இந்த **உவமை** தங்களுக்குத் தான் பொருந்துகிறது என முழுமையாய் பற்றிக் கொள்ள இயலாத நிலையில், நேரம் வந்தபோது இயேசு தங்களுக்கு பாடம் புகட்டியிருப்பதை உணர்ந்தார்கள். ஏற்கனவே அவர்கள் தீர்மானித்திருந்தபடி அவர் அழிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள், ஆனாலும் அந்த வேளையில் இருந்த **ஜனங்களினிமித்தம் பயந்தார்கள்.** இயேசு வெற்றிகரமாக பட்டணத்துக்குள் நுழைந்ததை அவர்களே பார்த்தார்கள், எத்தனை பேர் ஜனங்களுக்குள் அவரை*

*தீர்க்கதரிசியென்று விசுவாசித்தார்கள் என்பதையும் சாட்சியிட்டார்கள். யோவான் ஸ்நானனுக்குக் கொடுத்திருந்த அதே மிக உயர்ந்த மதிப்பை இயேசுவின் மேல் அவர்கள் வைத்தார்கள் (21:26).*

## ராஜாவின் குமாரனுடைய கலியாணம் குறித்த உவமை (22:1-14)

*[1]இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவென்றால்,*

*[2]பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணம் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.*

*[3]அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள்.*

*[4]அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரர்களை அழைத்து, நீங்கள் போய், இதோ என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன். என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்துக்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்று அனுப்பினான்.*

*[5]அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி ஒருவன் தன் வயலுக்கும் ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள்.*

*[6]மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள்.*

*[7]ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலை பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்.*

*[8]அப்பொழுது, அவன் தன் ஊழியக்காரரை நோக்கி, கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள்.*

*[9]ஆகையால் நீங்கள் வழிச்சந்திகளிலே போய் காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான்.*

*[10]அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது.*

*[11]விருந்தாளிகளைப் பார்க்கும்படி, ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு,*

*[12]சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்.*

*[13]அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி, இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டு போய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.*

*[14]அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர்,*

*தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.*

யூதமத தலைவர்களுக்கு மறு உத்தரவு கொடுக்கும் படி இயேசு கொடுத்த மூன்றாவது உவமை ராஜாவின் குமாரனுடைய கலியாணம் (21:28-32, 33-46; 22:1-14).[16] இது இராஜ்யத்தைப் பற்றிய ஒரு உவமை, மதத்தலைவர்களையும் யூதர்களையும் ஆக்கினைக்குள்ளாக்குவதினிமித்தம் பிரதானமாக இயேசுவால் கொடுக்கப்பட்டது. இந்த ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவை தொடர்ந்து ஏற்றுக்கொள்ள மறுத்து நிற்கிறவர்களை பிரதி நிதித்துவப்படுத்துகிறார்கள். அவர்களுடைய இந்த புறக்கணிப்பின் விளைவாக, ஒரு காலத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி என்று கருதப்பட்ட இந்த ஜனங்களின் மீது கொடிய தண்டனையை அவர் கொடுப்பார். அவர்கள் நீக்கப்படுவார்கள், மற்றும் அவர்கள் அபாத்திரராய்க் கருதினவர்கள் (சமாரியர் மற்றும் புறஜாதிகள்) கிருபையால் அழைப்பிக்கப்பட்டு தேவனுடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கப் பண்ணப்படுவார்கள்.

**வசனம் 1.** அதிகாரம் 21ல் கடைசியில் பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் முதல் இரண்டு உவமைகளும் தங்களுக்கு நேரடியாக குறிவைத்து இயேசுவால் கொடுக்கப்பட்டவை என்பதை புரிந்துகொள்ளத் துவங்கினார்கள். இது அவர்மீது கொண்டிருந்த அவர்களுடைய பகைமையை அதிகரிக்கப் பண்ணியது. உடனே அவர்கள் அவரைப் பிடிக்க வகை தேடினார்கள், ஆகிலும் ஜனங்களைக் குறித்த பயம் அவர்களை அப்படிச் செய்யாதபடி தடுத்தது (21:45, 46). யூதர்கள் **இயேசுவிடம்** எவ்வளவுதான் பகைமையை வெளிப்படுத்தினாலும், அவர் மூன்றாவது உவமையையும் போதித்தார் என்று வசனம் 1 விளக்கப்படுத்துகிறது: **இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசினார்.** “உவமைகள்” என்று இந்தப் பதம் பன்மையில் பேசப்படுகிறது. ஏன் இப்படிப் பேசப்படவேண்டும்? (1) அது ஒருவேளை இயேசு மூன்று உவமைகளை ஒரே நிகழ்ச்சியில் பேசினதால் அப்படிச் சொல்லியிருக்கலாம் (21:28-22:14). (2) இந்த மூன்றாவது உவமையில் இரண்டு பாகங்கள் இருப்பதால் ஒருவேளை அப்படிச் சொல்லியிருக்கக் கூடும் (22:1-10, 11-14). (3) இங்கே குறிப்பிடப்படாத வேறே உவமைகளையும் இந்த வேளையில் இயேசு சொல்லியிருக்கலாம்.

**வசனம் 2.** இயேசு பெரும்பாலும் தமது உவமைகளைப் பேசும் போது, “பரலோகராஜ்யம் ... ஒப்பாயிருக்கிறது” அல்லது “பரலோக ராஜ்யம் ... போலிருக்கிறது” என்று முன்னுரை கொடுத்துத் துவங்குவார் (13:24, 31, 33, 44, 45, 47; 18:23; 20:1; 25:1). இங்கே இராஜ்யம் **தன் குமாரனுக்கு கலியாணஞ் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பிடப்படுகிறது.** ராஜா தேவனைக் குறிக்கிறது (காண்க 5:35; 18:23; 21:28, 33), மற்றும் ராஜாவின் குமாரன், தேவனுடைய குமாரனாகிய இயேசுவைக் குறிப்பிடுகிறது (காண்க 21:37). புதிய ஏற்பாட்டில் அடிக்கடி இயேசுவை மணவாளனாக சித்தரித்து வசனங்கள் பேசுகிறது (9:15; 25:1; யோவான் 3:29; எபேசியர் 5:27; வெளிப்படுத்தின விசேஷம் 21:2, 9). எந்த ஒரு மணவாட்டியையும் குறிப்பிடாததால், அவள் தேவனுடைய ராஜ்யமாகிய - கிறிஸ்துவின் சபைதான் என்பது நிச்சயம் (எபேசியர் 5:22-33).

பூர்வகாலங்களில் ராஜாக்களும் பிற முக்கிய தலைவர்களும் தங்களுடைய குமாரர்களின் கலியாணத்தில் ஏராளமாக செலவு செய்து விருந்து வைப்பது ஒரு

பொதுவான நிகழ்ச்சி, அதில் ஆயிரம் பேர்களுக்கு மேலான விருந்தாட்களை அழைத்து விருந்து வைப்பார்கள்.[17] Robert H. Mounce குறிப்பிடுகையில், "திருமணவிருந்து என்பது பரவலாக பழங்கால சரித்திர ஏடுகளில் வருகின்ற வாழ்வின் ஆசீர்வாதங்களை சித்தரித்தன (உதாரணமாக ஏசாயா 25:6 முதல்). இதன் மூலம் இந்த உவமையை நாம் இறுதித்தீர்ப்பின் கண்ணோட்டத்தில் விளக்கம் கொடுக்க வேண்டியவர்கள் என்று ஆலோசனை பெறுகிறோம்" என்றார்.[18] இந்த கலியான விருந்து குறித்து பின்னர் மத்தேயுவிலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் தேவனுடைய இராஜ்யத்தின் முடிவுகால சம்பவமாக விவரிக்கப்படுகிறது (25:10; வெளிப்படுத்தின விசேஷம் 19:7-9).

**வசனம் 3.** இராஜாவின் **ஊழியக்காரர்களை** மனந்திரும்பவும் மனந்திரும்பா விட்டால் அவர்கள் மீது வருகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிக்கவும் யூதர்களிடம் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளாக அர்த்தப்படுத்திக் கொள்ளலாம் (காண்க 21:34). ஊழியக்காரர்கள் விருந்துக்கு ஆட்களை அழைத்தபோது, **அழைக்கப்பட்டவர்கள்** விருந்துக்குச் **செல்ல மனதில்லாதிருந்தார்கள்.**

கலியாணங்கள் பெரும்பாலான கலாச்சாரங்களில் மகிழ்ச்சியும் கொண்டாடலும் கொண்ட நிகழ்ச்சிகளாக இருந்துள்ளது. ஆகிலும் விசேஷமாக யூதர்கள் மத்தியில் இது மிகவும் உண்மையானது. இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றில் அழைக்கப்படுபவர்கள் மிகப் பெரிய கனமான காரியமாகக் கருதினார்கள், அழைப்பை புறக்கணிப்பது மிகப் பெரிய அவமானமாகக் கருதப்பட்டது. அழைப்பிக்கப்பட்ட விருந்தாளிகள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஆயத்தப்படுத்திக் கொள்ள கால அவகாசம் அளிக்கப்பட்டது; கலந்து கொள்ளத் தடையாக இருந்த எந்தக் காரியத்தையும் நிவர்த்தி செய்து விட்டு, அவர்கள் பங்கேற்கும்படி எதிர்பார்க்கப்பட்டனர். ஒரு சராசரி குடிமகனின் அழைப்பை ஒருவர் புறக்கணித்தால் அது அவமானமாகக் கருதப்பட்டால், ராஜாவின் அழைப்பை ஒருவன் புறக்கணிப்பது எவ்வளவு கொடுமையானது என்று ஒருவர் கற்பனை செய்து கொள்ளலாம். உவமையில் கூறப்படும் விருந்து ஒரு ராஜாவீட்டுக் காரியம், ஐசுவரியமும் செல்வாக்கும் உள்ளவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி.

திருமண பழக்க வழக்கங்கள் இன்றைக்கு நாம் அறிந்துள்ளவைகளைக் காட்டிலும் யூதர்களின் முறைமைகள் மிக அதிகமான வித்தியாசமுடையவைகளாயிருந்தன: தம்பதிகள் முதலாவதாக நியமனம் பண்ணப்படுவார்கள், இது பெரும்பாலும் மணமகன் மற்றும் மணமகனின் பெற்றோர்களுக்கு இடையே ஏற்பாடு செய்யப்படும். நியமனத்துக்குப் பின்பு நிச்சயதார்த்தம் நடைபெறும், இது சில மாதங்கள் முதல் ஒரு ஆண்டுவரை கூட நீடிக்கும். இந்த பந்தம் தள்ளிவிடுதலில் மட்டுமே பிளவுபடுகிற ஒரு ஒப்பந்தம். அப்படிப்பட்ட ஒரு நிச்சயதார்த்தத்தைக் குறித்துதான் மரியாள் யோசேப்பு சம்பவத்தில் காணலாம். அவர்கள் இருவரும் பாலுறவில் ஈடுபடாவிட்டாலும், மரியாள் ஏற்கனவே யோசேப்பின் மனைவி என்று கருதப்பட்டாள் (1:18-21). நிச்சயிக்கப்பட்ட காலக்கட்டத்தில் ஒரு ஸ்திரீக்கு நிச்சயிக்கப்பட்டவன் (திருமணத்துக்கு) முன் மரித்தால் அவள் விதவையாகவே நடத்தப்படுவாள்.

கலியாணத்துக்கும் நிச்சயதார்த்தத்தைத் தொடர்ந்து நடக்கும் விருந்துக்கும் உரிய அழைப்புகள் முன் கூட்டியே கொடுக்கப்படும். நிச்சயதார்த்தத்தின் போது முதல் அழைப்பு முறைப்படி அனுப்பப்படுவது வழக்கம். இவைகளுக்கு

இடைப்பட்ட காலம் அதிகமாக இருப்பதால் திருமணத்தின் போது இரண்டாவது அழைப்பு அனுப்பப்படும். இந்த இரண்டாவது அழைப்பும் கூட விருந்து எப்பொழுது ஆயத்தமாக இருக்கும் என்று சரியாக முன்கூட்டித் தீர்மானிப்பது கடினமானதால் அழைப்பு பொதுவாகக் கொடுத்து வைக்கப்படும் (லூக்கா 14:16, 17).[19]

கூப்பிடுவோன் ஒருவனை தெருக்களினூடே அனுப்பி அழைக்கப்பட்ட விருந்தாளிகளுக்கு திருமணம் சீக்கிரம் நடக்கப் போகிறது என்று அறிவிப்பார்கள். அழைக்கப்பட்டவர்கள் நன்கு வஸ்திரம் தரித்து ஆயத்தமில்லாமல் வருவார்களானால், அவர்கள் திருமண விருந்தில் பங்கு பெற அனுமதிக்கப்பட மாட்டார்கள். கூப்பிடுகிறவன் அனுப்பி வைக்கப்பட்டபின், மணமகன் தெருக்களினூடே போய் திருமணக்காரர்களையும், மணமகளையும், கூட அழைக்கப்பட்டுள்ள விருந்தாளிகளையும் கூட்டிச் சேர்ப்பார். திருமணம் நடக்குமிடம் பெரும்பாலும் திருமணத் தம்பதிகள் தங்கப்போகிற வீடாக இருக்கும். திருமணக்காரர்களும் அழைக்கப்பட்ட விருந்தாளிகளும் வீட்டிற்குள் நுழைந்தவுடன், கதவுகள் பூட்டப்படும். அழைக்கப்பட்ட விருந்தாளிகளும் தாமதமாக வருவார்களானால், உள்ளே செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் (25:1-13).

**வசனம் 4.** உவமையில் சொல்லப்படும் விருந்தளிப்பவன் ஒரு ராஜாவுக்குரிய குணாதிசயமில்லாதவனாக நடந்து கொண்டான்: அழைக்கப்பட்டவர்களின் முதல் புறக்கணிப்புக்குப் பின், **வேறே ஊழியக்காரரை** அனுப்பி ராஜா மேலும் **சிலரை விருந்துக்கு அழைப்பித்தான்** (காண்க 21:36). அவர்கள் போய் எல்லாம் **ஆயத்தமாயிருக்கிறது** என்று செய்தி அறிவிக்கும்படி சொன்னான்; **எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும்** அடிக்கப்பட்டு விருந்து ஆயத்தமாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லச் சொன்னான் (காண்க லூக்கா 15:23, 27, 30).

யூதர்கள் பிரதானமாக அழைக்கப்பட்ட விருந்தினர் அவர்களோ திரும்பத்திரும்ப தேவனுடைய அழைப்பை ஆரம்பத்திலிருந்தே வெறுத்து ஒதுக்கி மனந்திரும்ப ஏதுவான அவருடைய உடன்படிக்கைகளை தள்ளிவிட்டனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முதல் அழைப்பு சீனாய்மலையில் நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதன் மூலம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை புறக்கணித்தபோது தேவன் மீண்டும் மீண்டும் தீர்க்கதரிசிகளை அனுப்பி தம்பக்கம் திரும்பும்படிச் சொன்னார். ஆகிலும், அவர்கள் தீர்க்கதரிசிகளை கொலை செய்தனர் (21:35, 36; 23:29-35). தமது ஒரே குமாரனை அவர்களிடம் அனுப்புவதன் மூலம் அவர்களுக்குக் கடைசியாக ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தார் (21:37-39).

**வசனம் 5.** இந்த இரண்டாவது அழைப்பும் நிராகரிக்கப்பட்டது; **அவர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை.** சில மொழிபெயர்ப்புகளில் "அவர்கள் அதை அசட்டை பண்ணினார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது (KJV; NKJV; ASV; RSV; NRSV). வினைச் சொல்லாகிய *ameleō* என்பது யாரோ ஒருவரை அல்லது ஏதோ ஒன்றை "புறந்தள்ளுதல்," "கண்டு கொள்ளாமல் விடுதல்," அல்லது "அக்கரையற்றிருத்தல்" என்றெல்லாம் பொருள்படும். விருந்திலே கலந்து கொள்வதை விடுத்து, அவர்கள் **தங்கள் வழியிலே** ஒருவன் **தன் வயலுக்கும்** ஒருவன் **தன் வியாபாரத்துக்கும் போய் விட்டனர்.** விவசாயம் செய்பவனும்

*வியாபாரம் செய்பவனும் அநேக ஜனங்களுக்கு முன்மாதிரியாக இங்கே காட்டப்படுகின்றனர். இரண்டு தொழில்களிலுமே குறிப்பிடத்தக்க தீமைகள் எதுமில்லை. இந்த உதாரணங்கள் உலகக்காரியங்களில் முழு ஈடுபாட்டை ஏற்படுத்தி தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள அநேகரை தடைசெய்கிறது என்பதைக் காட்டுகிறது.*

*இதற்கு ஒத்த உவமை லூக்காவில் சொல்லப்பட்டிருக்கிறபடி விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களில் அநேகரும் வராமலிருக்கும்படி சொல்லுகிற சாக்குப் போக்குகளை சித்தரிக்கிறது. ஒருவன், சமீபத்தில் கிரயம் பெற்ற வயலை அகத்தியமாய்ப் போய்ப் பார்க்க வேண்டும் என்றான். மற்றொருவன் தான் வாங்கின ஐந்தேர் மாட்டைப் போய் சோதித்துப் பார்க்க வேண்டும் என்றான். வேறொருவன் புதிதாய் விவாகம் பண்ணியிருப்பதால் அவளுடன் நேரத்தை செலவிட வேண்டும் என்றான் (லூக்கா 14:18-20). இந்த உவமையில் அப்படிப்பட்ட போக்குகள் காணப்படவில்லை.*

***வசனம் 6. மற்றவர்கள்** - விவசாயம் பண்ணவோ அல்லது வியாபாரம் பண்ணவோ போகாதவர்கள் - அவன் **ஊழியக்காரர்களை பிடித்து, அவமானப்படுத்தி கொலை செய்தார்கள்** (காண்க 21:35, 36). ஒரு அன்பான அழைப்பைக் கொண்டு வருகிறவர்களை, அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவமானப்படுத்துவது என்பது சமுதாயத்தில் வெளிப்படையாகவே ஏற்புடையதல்ல. ராஜாவினிடத்திலிருந்தோ அல்லது பிரதானமான எந்த நபரிடத்திலும் அனுப்பப்படுகிறவர்களை தவறாக நடத்துவது என்பது நினைத்துக் கூட பார்க்க முடியாதது.[20] அப்படிச் செய்வதால் ஒருவர் தன் உயிரையே ஆபத்துக்குள்ளாக்குகிறார்.*

***வசனம் 7.** தனது ஊழியக்காரரின் மரணத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட ராஜா, கோபமடைந்து, **தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தை சுட்டெரித்தான்.** தனது கனத்தை அவமானப்படுத்தி களங்கமற்ற அவனுடைய ஊழியக்காரரின் உயிரை எடுத்த அந்த மனுஷர்களை, தனது சேனைகளைக் கொண்டு கொலை செய்தான். பட்டணங்களை எரித்துப் போடுவது ஒரு இராணுவத்துக்கு பழங்காலங்களில் சாதாரண விஷயம், முழு அழிவையும் அது அடையாளப்படுத்தியது.[21]*

*இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிற விளக்கம் அநீதியானவர்கள் மீது தேவனுடைய கோபத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது, இந்தக் கருத்து பிற உவமைகளிலும் காணப்படுகிறது (18:34; 21:40, 41). அவர் நீடிய பொறுமையுள்ளவராயினும், அவருடைய பொறுமைக்கும் எல்லையுண்டு. நேரம் வரும்போது, துன்மார்க்கரை அவர் ஆக்கினைக்குள்ளாக்குவார்.*

*இந்த விளக்கம், முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனமாகிய எருசலேமின் அழிவு கி.பி. 70ல் இடம் பெறும் என்பதையும் குறிப்பிடுகிறது.[22] இந்த நிகழ்ச்சியை இயேசுவும் மத்தேயு 24:1, 2, 15ல் முன்னறிவித்தார். யூதர்கள் தேவன் கொடுத்த கடைசி சந்தர்ப்பமாகிய இராஜ்யத்தின் பிரவேசத்தையும் புறக்கணித்தபடியால், அவர் அவர்களைப் புறம்பாக்கி ரோம தளபதி தீத்துவை அவர்கள் மேல் அழிவைக் கொடுக்கும்படி செய்தார். கி.பி. 70ல் இடம் பெற்ற எருசலேமின் அழிவினால் தேவாலய ஆராதனைக்கும் பலிசெலுத்தும் முறைமைக்கும் ஒரு முடிவைக் கொண்டு வந்தது. இந்தக் காரியங்கள் ஏற்கனவே கிறிஸ்துவின் மரணத்தினாலும் புதிய உடன்படிக்கையினாலும்*

*மாறுதலுக்குட்படுத்தப்பட்டது (c. கி.பி. 30), ஆகிலும் தேவன் இன்னமும் நாற்பது ஆண்டுகளை நீடிக்கப் பண்ணி தொடர்ந்து அவகாசமளித்தார். அவைகள் கடைசியாக அழிவுண்டபோது (காண்க எபிரெயர் 8:13), இஸ்ரவேல் இனியும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமல்ல என்பது இன்னும் அதிக சாட்சியமாயிற்று.*

***வசனங்கள் 8, 9.*** *அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள்* ***அபாத்திரராய்ப் போனார்கள்*** *என்று ராஜா அறிவித்தான். வஞ்சப்புகழ்ச்சி அணியில் இது பேசப்படுகிறது ஏனெனில் அவன் முதலாவதாக "உயர்மதிப்புள்ளவர்களையே" கலியாணத்துக்கு அழைத்திருப்பான். ஆர்வமளிக்கும் ஒரு விஷயம் என்னவெனில், "பாத்திரமுள்ளவன் எனும் வார்த்தை பிசீதியாவில் உள்ள அந்தி யோகியாவில் ஏற்றுக்கொள்ளாத யூதர்களுக்கு மறுமொழி கொடுத்த பவுலின் பேச்சில் இடம் பெறுகிறது": "முதலாவது உங்களுக்கே தேவ வசனத்தை சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு* அபாத்திரராகத் *தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புற ஜாதியாரிடத்தில் போகிறோம்" (நடபடிகள் 13:46; வலியுறுத்தல் என்னு டையது).*

*இந்த நேரத்தில், ராஜா தனது மூன்றாவது கூட்ட* ***ஊழியர்களை*** *அனுப்பி வேறே ஜனங்களை* ***கலியாணவிருந்துக்கு*** *அழைப்பித்தான். இந்தத் தடவை அவர்களை நோக்கி: "ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போங்கள்" என்று சொல்லுகிறார். "வழிச் சந்திகளிலே"* (*diexodous tōn hodōn*) *என்பதை பிரித்துப் பார்ப்பது கடினம், இப்பதம் பல்வேறு வார்த்தைகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது: "பிரதான தெருக்களில்"* (TEV), *"தெருமுனைகளில்"* (NCV), *மற்றும் "பிரதான குறுக்குத் தெருக்களில்"* (NJB). *எப்படியிருப்பினும், இப்பதம் "பிரதான தெருவின் குறுக்கு (வழியிலே) பட்டணத்தின் எல்லைக்குப் போய் பட்டணத்தின் திறந்த வெளிகள் வரை"*[23] *செல்லுவதைக் குறிப்பிடுகிறது.* Robert H. Gundry *ஆலோசனைப்படி இந்த இடத்தில் மட்டுமே ஜனங்களைக் கண்டு பிடிக்க முடியும், ஏனெனில் "பட்டணப்பகுதி எரிக்கப்பட்டு விட்டது" (22:7).*[24]

***வசனம் 10.*** *இந்த* ***ஊழியக்காரர்கள்*** *தங்கள் கண்ணில்படுகிற யாராயிருந்தாலும் -* ***நல்லாரோ தீயோரோ*** *- விருந்து வர அழைப்புக் கொடுக்கும்படிக் கூறப்பட்டனர். முதலில் அழைப்பிக்கப்பட்டவர்கள் நடந்து கொண்ட முறைக்கு முரணாக, இந்த ஜனங்கள் எளிய மக்களாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் ராஜாவின் அழைப்பை வரவேற்றார்கள், கல்யாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது (காண்க 8:11, 12; 21:41). யூதர்கள் கிறிஸ்துவை புறக்கணித்ததை தொடர்ந்து, இயேசு தமது அப்போஸ்தலர்களை உலகம் முழுவதும் அனுப்பி பரலோக ராஜ்யம் எல்லா இனம், சமுதாயப் பிரிவுகள். தேச (ஜாதி) ஜனத்தாருக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை சொல்லச் சொன்னார் (28:18-20; மாற்கு 16:15, 16).*

***வசனம் 11.*** ***விருந்தாளிகளைப்*** *பார்க்கும்படி* ***ராஜா*** *உள்ளே பிரவேசித்தபோது, முறையான* ***கலியாண வஸ்திரம்*** *தரித்திராத ஒரு* ***மனுஷனை*** *அங்கே கண்டான். ராஜா இந்த கல்யாண விருந்தினிமித்தம் விசேஷமாகக் கொடுத்த சிறப்பு வஸ்திரங்களாய் அது ஒருவேளை இருந்திருக்கலாம். விசேஷ நிகழ்ச்சிகளுக்கு ராஜா வஸ்திரங்களை அளிப்பது வழக்கத்தில் இருந்துள்ளது*

*(2 ராஜாக்கள் 10:22).*[25] கலந்து கொண்டவர்கள் ஏழைகளானதால், ராஜா ஒருவேளை அவர்களுடைய கலியாண வஸ்திரங்களைக் கொடுத்திருக்கலாம். இந்த நிகழ்ச்சியில், வஸ்திரம் என்பது தேவன் கிறிஸ்து மூலமாய் மனுஷனுக்கு அளித்த நீதியை குறிப்பிடக் கூடியதாயிருந்திருக்கலாம் *(ரோமர் 3:21-26; கலாத்தியர் 3:26-29).*

மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில், திருமண ஆடைகள் விருந்தாளிகளின் சுத்தமும் வெண்மையுமான சொந்த ஆடைகளாக இருக்கும். அப்படியிருக்குமானால், கலியாண வஸ்திரம் என்பது இராஜ்யத்தின் குடிமக்கள் எல்லாருடைய நீதியுள்ள ஜீவியத்தை அது அடையாளப்படுத்துவதாயிருக்கலாம், இதுவே அவர்களிடம் எதிர்பார்க்கப்பட்டது.[26] அதே உருவகத்தில், மெல்லிய வஸ்திரம் (பிரகாசமும் சுத்தமுமான அதை) கிறிஸ்துவின் மணவாட்டிக்கு தரித்துக் கொள்ளும்படி கொடுக்கப்பட்ட "பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளிப்படுத்தின விசேஷம் 19:8). இந்த வியாக்கியானம் முந்தின உவமையோடு ஒத்துப்போவதாக உள்ளது, அதாவது நல்லகனிகளைக் கொடுக்கிற வேறே ஜனங்களிடத்தில் கொடுக்கப்படும் திராட்சத் தோட்டமாயிருக்கிறது *(21:41, 43; காண்க 5:20).*[27]

**வசனம் 12.** ராஜா இந்த விருந்தாளியை **சிநேகிதனே** என்று அழைக்கிறார் (20:13 க்கான விளக்கவுரையைக் காண்க). அவன் அவனிடம் **கல்யாண வஸ்திரமில்லாமல் நீ எப்படி இங்கே வந்தாய்?** என்று கேட்டார். ராஜா கேட்டவிதம் "காவல் காப்போன் இருக்கும் போது, இப்படி வஸ்திரம் தரித்தவனாய் அவர்களைத் தாண்டி எப்படி வந்தாய்?" என்பது போல் இருந்தது. கேட்கப்பட்ட கேள்வி தனக்கு தகவல் (விளக்கம்) கிடைக்க வேண்டும் என்று கேட்பதைக் காட்டிலும் குற்றம் பிடிப்பது போலவே காணப்பட்டது. கிரேக்க மொழியில் இந்த வார்த்தை "எப்படி" (*pōs*) என்பது ஏற்றுக் கொள்ளாமை அல்லது புறக்கணித்தலை குறிக்கும் சொல். இதை "உனக்கு எவ்வளவு தைரியம்?" என்றோ "என்ன உரிமையில்?" என்றோ மொழிபெயர்க்கலாம். இந்தக் குறிப்பிட்ட கேள்வி, "கலியாண வஸ்திரம் இல்லாமல் நீ எப்படி தைரியத்தோடே இங்கே வரலாம்?[28] என்று கேட்கப் படலாம்." **அந்த மனுஷன்** ராஜாவை வெகுவாய் உள்ளத்தைப் புண்படுத்தி விட்டான், அவன் பதில் எதுவும் பேசாமலிருந்தான். **பேசாமலிருந்தான்** (*phimoō*) என்னும் கிரேக்க வார்த்தையை நேரடியாகச் சொன்னால் அவன் "வாய் கட்டப்பட்டிருந்தான்." உருவக மொழியில் "அமைதிபடுத்தப்பட்டிருப்பதற்கு" பயன்படுத்தப்பட்ட வார்த்தை இது.

கலியாண வஸ்திரம் தரிக்காமல் வந்திருந்த அந்த மனுஷன், "சுவிசேஷத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டிருந்தும், அதற்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளாமல் அசட்டை பண்ணினவனாய் இருக்கும் ஒரு மனிதனுக்கு" ஒப்பிடப்படுகிறான்.[29] தங்களை இயேசுவின் சீஷர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலர் அவருடைய இரண்டாம் வருகையில் நியாயத்தீர்ப்புக்குத் தயாராக இருக்க மாட்டார்கள் *(7:21-23; 24:45-51; 25:41-46).*

**வசனம் 13.** ராஜா தன்னுடைய **ஊழியக்காரரிடத்தில்** ஆயத்தமாய் வராத அந்த விருந்தாளியை **கையுங்காலும் கட்டிக் கொண்டு போய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்** என்றான்,

*இந்த வாக்கிய நடை நித்திய இருளையும் உபத்திரவங்களையும் சித்தரிக்கிறது (காண்க 8:12 க்கான விளக்கவுரை).*

***வசனம் 14.*** *இயேசு இந்த உவமையை,* ***அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்*** *என்று சொல்லி நிறைவு செய்கிறார். "அநேகர்" எனும் பதம் "எல்லாரும்" எனும் வார்த்தையாக இங்கே பயன்படுத்தப்படலாம் (20:28 ற்கான விளக்கவுரையைக் காண்க). "அழைக்கப்பட்டவர்கள்" எனும் பெயரிடைப் பண்புச் சொல்* "called" (*klētos*) *என்பது "அழைக்கப்படுதல்"* "invited" *என்பதுடன் (kaleō), தொடர்புடையச் சொல் இந்த உவமை முழுவதும் காணப்படுகிறது (22:3, 4, 8, 9). சரியான விதமாக, சுவிசேஷ அழைப்பு எல்லாருக்குமானது தான்; கருத்தில் அது உலகம் முழுவதற்குமானது (28:18-20; மாற்கு 16:15, 16; லூக்கா 24:47). இருப்பினும், அதைக் கேள்விப்பட எல்லாருக்கும் சந்தர்ப்பம் இருக்காது (ரோமர் 10:14, 15).*

*அழைக்கப்பட்டவர்கள் அநேகராக இருந்தாலும், ஒரு சிலரே அழைப்பை ஏற்றுக் கொள்வார்கள். மோரீஸ் எச்சரித்து, "தேவனுடைய அழைப்பை கேட்டு அவருடைய கிருபையை அறிந்தவர்கள் அழைப்பு என்பது பதில் கொடுப்பது போன்றதே என எண்ணிவிடக் கூடாது,"*[30] *என்று சொன்னார். தேவனுடைய அழைப்புக்குத் தங்களை கீழ்ப்படுத்திக் கொள்பவர்களே "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்"* (*eklektos*) *அல்லது "தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்" (24:22, 24, 31); இவர்களே கடைசி வரை இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள். இயேசுவை புறக்கணித்தவர்கள் எல்லாரும் இழந்து போனவர்களாயிருப்பார்கள்.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமை *(21:28-32)*

*இயேசு அவரைப் பின்பற்றுவோர் தாங்கள் செயல் முனைப்புடன் இருக்க வேண்டும் என அர்த்தப்படுத்தினார். நாம் தேவனுடைய திராட்சைத் தோட்டத்தில் வேலையாட்களாய் இருக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறோம். நாம் உக்கிராணமுள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்த மூன்று வார்த்தைகள் நம்மை சிறப்புக் குணாதிசயமுள்ளவர்களாகக் காட்டுகிறது.*

*"அனுகூலமானவர்களாக இருத்தல்." நமது மிகப்பெரிய திறமை செயல்பட (ஆயத்த) அனுகூலமுள்ளவர்களாயிருத்தல் என்பதுதான். தொழுகையும் வேதத்தைக் கற்றுக் கொள்தலும் முக்கியமானவைகளே.*

*"உணர்ச்சி வசப்படுபவராக இருத்தல்." நம்மைச் சுற்றி இருப்போரின் சூழ்நிலைக்கேற்ப நாம் உணர்ச்சிவயப்படுதல் அவசியம். சில நேரங்களில் மிகச் சிறியவர்களிடம் கூட நாம் அக்கரைகாட்டவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுதல் (25:40, 43).*

*"கணக்கு ஒப்புவிப்பவன்." தானியேல் வெப்ஸ்டர் எழுதினதாவது, "எனது மனதை ஆக்கிரமித்த மிகமிக முக்கியமான காரியம் என்னவெனில், தேவனுக்கு தனிப்பட்ட முறையில் நான் ஆற்ற வேண்டிய என் கடமை."*[31] *நம்மில் ஒவ்வொருவரும் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள்.*

*இராஜ்யத்தைப் பொறுத்த தொடர்பில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? நீங்கள் அனுகூலமானவராக, உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக, கணக்கொப்புவிக்கக் கூடியவராயிருக்கிறீர்களா?*

## விருந்துக்கு வாருங்கள் (22:4)

ராஜா தான் ஆயத்தப்படுத்தியிருந்த பந்திக்கு விருந்தாளிகளை அழைத்து வரும்படி, தமது ஊழியக்காரரை அனுப்பினான் (22:4). அதேபோல, பழைய பாடல் ஒன்று வலியுறுத்தும் கருத்து பின் வருமாறு உள்ளது. "எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, விருந்துக்கு வாருங்கள்"[32] பரலோகத்தின் ஆயத்தம் இயேசுவால் செய்யப்பட்டிருக்கிறது (யோவான் 14:1-3). நாம் அவரது அழைப்பை ஏற்று நம்முடைய இருதயங்களை ஆயத்தப்படுத்தி பரலோகத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். "பரலோகம் ஆயத்தமாயிருக்கிற மக்களுக்காக ஆயத்தப்படுத்தப்பட்ட இடம்," என்பது சொல் வழக்கு.[33] லவேதிக்கேயருக்கு இயேசு, "இதோ வாசற்படியிலே நின்று கதவைத் தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே நான் போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளிப்படுத்தின விசேஷம் 3:20), என்று சொன்னார்.

---

குறிப்புகள்

[1]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 507. [2]*இந்த வசனப்பகுதிகளின் கடினமான பாடப்பகுதியை அறிய காண்க* Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. (Stuttgart: German Bible Society, 1994), 44–46. [3]*இந்த ஆயத்தகார்களில் மத்தேயு ஒருவர், ஆனால் அவர் எல்லாவற்றையும் விட்டு இயேசுவைப் பின்பற்றினார் (9:9).* [4]*சமாரியாவிலிருந்து உதாரணம் காண்க* Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 133. [5]Ibid., 132. [6]Mishnah *Baba Bathra* 3.1. [7]Talmud *Baba Bathra* 35b. [8]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 540–41. [9]Keener, 512. [10]*காண்க 1 இராஜாக்கள் 18:4; 2 நாளாகமம் 24:20, 21; நெகேமியா 9:26; எரேமியா 7:25, 26; 20:1, 2; 25:4; 26:21-23; மத்தேயு 23:37; லூக்கா 13:34; எபிரெயர் 11:32-38.*

[11]Donald A. Hagner, *Matthew 14—28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 620–21. [12]*லூக்கா 20:15 மத்தேயு 21:39 உடன் ஒத்துப் போகிறது. சில பழங்காலச் சுவடிகள் மாற்குவின் வரிசைப்படுத்துதலிருந்து மத்தேயுவில் மாற்று வரிசையில் காணுகிறது.* (Metzger, 47.) [13]Morris, 542. [14]Tacitus *Annals* 14.42. [15]Metzger, 47. [16]*லூக்கா 14:15-24ல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு உவமை ஒன்றுபோல் இருந்தாலும், மாறுபட்டு இருக்கிறது. இயேசு இந்தக் கதையை பரிசேயருடைய தலைவனின் வீட்டில் பந்தியிருக்கையில் சொன்னார் (லூக்கா 14:1). பின்னர் ரபீமார்களின் இலக்கியங்களிலும் இது தொடர்பான உவமையைக் கொண்டுள்ளது.* (Talmud *Shabbath* 153a.) [17]Diodorus of Sicily 16.91.4–92.1; Pliny *Letters* 10.116. [18]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991),

205. [19]*உயர்குடிமக்கள் மற்றும் தாழ்குடிமக்கள் இருசாராரிடத்திலும் இரட்டை அழைப்புமுறை வழக்கத்தில் இருந்ததை பாப்ரி சாட்சியிடுகிறது.* (Keener, 519.) *சிலர் இரண்டு முறை அழைக்கப்பட்டால் ஒழிய விருந்தில் கலந்து கொள்ள மாட்டார்கள், இப்படியாக தங்கள் அழைப்பை உறுதி செய்து கொள்வார்கள் என்று ரபீமார்களின் இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளது.* (*Lamentations Rabbah* 4.2.) *எஸ்தர் ராஜாவையும் ஆமானையும் விருந்துக்கு அழைத்திருந்தாள், ஆயத்தங்கள் செய்தபின் அடுத்த நாளில் உயர் அதிகாரிகள் வந்து ஆமானை கூட்டிக் கொண்டு போனார்கள் (எஸ்தர் 5:8; 6:14).* [20]*அப்படிப்பட்ட செய்தியாளர்கள் ஒருபோதும் தவறாக நடத்தப்படவில்லை என்பதற்காக இதைச் சொல்லவில்லை. ராஜாவாகிய எசேக்கியேலின் செய்தியாளர்களை இஸ்ரவேலர் பரியாசம் பண்ணி, ஏள்ளி நகையாடி கேலியும் கிண்டலுமாக அவர்களை முட்டாள்களாக்கினர்.* (Josephus *Antiquities* 9:13.2.)

[21]*யோசுவா 6:24; 8:28; 11:11, 13; 1 சாமுவேல் 30:1; 1 இராஜாக்கள் 9:16; 2 இராஜாக்கள் 25:9; 2 நாளாகமம் 36:19; நெகேமியா 1:3; 2:17; 4:2; சங்கீதம் 74:7, 8; ஏசாயா 1:7; 64:11; எரேமியா 38:23; 39:8; 46:19; 52:13; ஆமோஸ் 1:7, 10, 12.* [22]*தீத்துவால் அழிக்கப்பட்ட எருசலேம் மற்றும் தேவாலயம் குறித்து அறிய,* Josephus *Wars* 5; 6 *பதிவுகளை காணவும்.* [23]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 244. AB *திருமறையில், "பட்டணத்துக்கு வெளியே கொண்டுபோகும் வழிச் சாலைகள்," என்று உள்ளது.* [24]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 438. [25]Talmud *Shabbath* 152b. [26]David Hill, *The Gospel of Matthew*, The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 302–3. [27]*கூடுதல் வஸ்திரம் தரித்தல் பற்றிய உருவகச் சொல் வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் காணப்படுகிறது. பரிசுத்தவான்கள், "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 7:14). "தங்கள் வஸ்திரங்களை அசுசிபடுத்தாத சில பேர் ... பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரம் தரித்து [கிறிஸ்துவுடனேகூட] நடப்பார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 3:4). "ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்" (வெளிப்படுத்தின விசேஷம் 3:5). கிறிஸ்து தம்முடைய ஜனங்களின் அவலட்சணம் தெரியாதபடிக்கு உடுத்திக் கொள்ள வெண்வஸ்திரத்தை தம்மிடம் வாங்கிக் கொள்ளும்படி கூறுகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 3:18).* [28]*காண்க* Bauer, 901. [29]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 252. [30]Morris, 552.

[31]Elizabeth Armstrong Reed and Graeme Mercer Adam, *Daniel Webster: A Character Sketch* (Chicago: H. G. Campbell Publishing Co., 1903), 123. [32]Charlotte G. Homer, "Come to the Feast," *Songs of the Church*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [33]D. L. Moody, *The Overcoming Life*, ed. Gene Fedele (Orlando, Fla.: Bridge-Logos Publishing, 2007), 216, 273.